முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *ஆகவே, அமைதியுடன் பொறுமை காக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *துறையிடமிருந்து பதில் வர, வர கவன ஈர்ப்பு எடுத்துக்கொண்டிருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. எம். ஆறுமுகம், கவன ஈர்ப்பில் பேசுகிறீர்களா? (குறுக்கீடு) சரி.*

4. கவன ஈர்ப்பு–தொடர்ச்சி

கோயம்புத்தூர், அவினாசிலிங்கம் மகளிர் நிகர்நிலைப் பல்கலைக்கழக நிருவாக நெறிமுறைகள்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர், அவினாசிலிங்கம் மகளிர் நிகர்நிலைப் பல்கலைக்கழக நிருவாக நெறிமுறைகள்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2015 செப்டம்பர் 21][திரு. பி. பழனியப்பன்]

அறிக்கை

அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் கல்லூரி 1957 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் நிதியுதவி பெற்று செயல்பட்டு வந்தது. 1988–ல் பல்கலைக்கழக மானியக் குழுவால் நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக அங்கிகாரம் செய்யப்பட்டது. அன்றைய விதிமுறைகளின்படி, பொதுக் குழு (General Body) அமைக்கப்பட்டது. அதன் பின்னர் 1991–ல், அதற்கான சட்ட திட்டங்கள் (Bye–Laws) முறைப்படி பதிவு செய்யப்பட்டன.

2. அவினாசிலிங்கம் மகளிர் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து, 1988 முதல் தொடர்ந்து இன்று வரை 100 சதவீதம் பற்றாக்குறை மானியம் பெற்று வருகிறது. தமிழக அரசிடமிருந்து 1988 முதல் ஆண்டொன்றுக்கு ரூ.50 இலட்சமும், 1992 முதல் ரூ.85.20 இலட்சமும் பராமரிப்பு நிதியாகப் பெற்று வருகிறது. 2010 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழு, நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களுக்கான புதிய நிருவாக நெறிமுறைகளை வகுத்து, அதன்படி அனைத்து நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களும் தங்களுடைய நிருவாக முறைகளை மாற்றியமைத்து, மனித வள மேம்பாட்டுத் துறை மற்றும் பல்கலைக்கழக மானியக் குழு ஒப்புதல் பெற்று பதிவு செய்ய வேண்டும் எனத் தெரிவித்தது. அதன்படி, வரைவு நிருவாக நெறிமுறைகளை ஏப்ரல் 2013–ல் பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு வரைவு சங்க அமைப்பு விதிக் குறிப்பு (Memorandum of Association) ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. அதில் திருத்தங்களுடன் மாற்றி அமைக்க வேண்டும் என பல்கலைக்கழக மானியக் குழு கேட்டுக்கொண்டது.

3. இதற்கிடையில், பல்லைக்கழக மானியக் குழு 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டு நெறிமுறைகளில் (Regulations) சில திருத்தங்களைக் கொண்டு வந்தது. அதற்கேற்ப சங்க அமைப்பு விதிக் குறிப்பில் (MoA) தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு, 6–5–2015–ல் பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கு பல்கலைக்கழக மானியக் குழு, அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்தை பொது நிதி பல்கலைக்கழகம் (Public funded) என்று அறிவித்து, அதற்கேற்ப உரிய திருத்தங்கள் செய்ய கேட்டுக்கொண்டது.

4. அதன்படி தேவையான அனைத்து மாற்றங்களையும் செய்து மனித வள மேம்பாட்டுத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

5. மனிதவள மேம்பாட்டுத் துறையிடமிருந்து ஒப்புதல் பெற்றவுடன், மீண்டும் பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு அனுப்பி, ஒப்புதல் பெற்று அதனைப் பல்கலைக்கழக பொதுக் குழு பதிவு செய்யும்.

6. ஆகஸ்ட் மாதம் 23 ஆம் தேதியிலிருந்து பல்கலைக்கழக மானியக் குழுவின் (University Grants Commission Regulations, Amendments, 2015) விதிமுறைகளுக்கிணங்க, பல்கலைக்கழகத்தின் மூத்த பேராசிரியர் துணைவேந்தராக (பொ.) நியமனம் செய்யப்பட்டு, செயல்பட்டு வருகிறார்.

7. பல்கலைக்கழகத்தைப் பொது நிதிப் பல்கலைக்கழகமாக ஏற்றுக்கொண்டு, அதற்கான நிருவாக முறையில் மாற்றங்கள் செய்து, மனித வள மேம்பாட்டுத் துறையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இந்தப் பல்கலைக்கழகம் சுயநிதிப் பல்கலைக்கழகமாக மாறுவதற்கு வாய்ப்பே இல்லை.

8. ஆனால், ஒரு சில ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் உண்மைக்குப் புறம்பாக இந்தப் பல்கலைக்கழகம் சுயநிதிப் பல்கலைக்கழகமாக மாறும் என்றும், மாணவியரின் கல்விக் கட்டணம் மிக அதிக அளவில் உயர்த்தப்படும் என்றும் தவறான தகவலைப் பரப்பி ஆர்ப்பாட்டம் செய்ததால், பல்கலைக்கழகத்திற்கு விடுப்பு அளிக்கப்பட்டது. பல்கலைக்கழக நிருவாகம், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுடன் கூட்டங்கள் நடத்தியதில், அனைவரும் பல்கலைக்கழகத்தை விரைவில் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதன் அடிப்படையில் 27–7–2015 முதல் வகுப்புகள் துவக்கப்பட்டு, பல்கலைக்கழகம் ஆசிரியர்களின் ஒத்துழைப்போடு அமைதியான முறையில் நன்முறையில் நடந்து வருகிறது.

9. இப்பல்கலைக்கழகம், தேசபக்தரும், காந்தியவாதியும், தமிழ் மாகாணத்தின் முதல் கல்வி அமைச்சருமான பத்மபூஷன் அமரர் முனைவர் தி.சு. அவினாசிலிங்கம் அவர்களால் தொடங்கப்பட்டு, ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு, சிறந்த கல்விப் பணியாற்றி வருகிறது. இக்கல்வி நிறுவனத்தில், இளங்கலை பட்டப் படிப்பில்

2015 செப்டம்பர் 21] [திரு. பி. பழனியப்பன்]

3,496 மாணவியரும், முதுநிலை மற்றும் ஆராய்ச்சி பட்டப் படிப்பில் 854 மாணவியரும், பொறியியலில் 891 மாணவியரும், ஆகமொத்தம் 5,243 ஏழை மற்றும் நடுத்தர மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள். இதில், ஏழு புலன்கள் உள்ளடங்கிய 40 துறைகள் இயங்கி வருகின்றன. மேலும், இப்பல்கலைக்கழகத்தில் 185 ஆசிரியப் பெருமக்களும், 99 ஆசிரியரல்லாத பணியாளர்களும் அரசு மானியத்தின்மூலம் தற்சமயம் ஊதியம் பெற்று வருகின்றனர். ஓய்வு பெற்ற 140 பணியாளர்கள் மாதந்தோறும் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

10. 2015–2016 ஆம் ஆண்டிற்கான செலவினங்களுக்காக முதல் தவணையாக 8–6–2015 அன்று ரூ.16.23 கோடியும், இரண்டாம் தவணையாக 8–9–2015 அன்று ரூ.18.44 கோடியும் மனித வள மேம்பாட்டுத் துறை வழங்கியுள்ளது. எனவே, அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் மனிதவள மேம்பாட்டுத் துறை நிதி மற்றும் மானியக் குழு நெறிமுறைகளின்படி நல்ல முறையில் செயல்பட்டு வருவதாலும், பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து தொடர்ந்து மானியம் பெறப்பட்டு வருவதாலும், தற்போது சுமுகமான முறையில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. எனவே, தற்போது இதுகுறித்து மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டிய நிலை இல்லை. மேலும், அவினாசிலிங்கம் பெண்கள் மனையியல் கல்லூரியானது நிகர்நிலைப் பல்கலைக்கழகமாகச் செயல்பட்டுவரும் நிலையில், இதனை மாநில அரசு ஏற்று நடத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அவ்விவர அறிக்கையில், "அவினாசிலிங்கம் மகளிர் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் மனித வள மேம்பாட்டுத் துறை நிதி மற்றும் மானியக் குழு நெறிமுறைகளின்படி, நல்ல முறையில் செயல்பட்டு வருவதாலும், பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து தொடர்ந்து மானியம் பெறப்பட்டு வருவதாலும், இதுகுறித்து மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டிய நிலை இல்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில், பல்கலைக்கழக

[திரு. எம். ஆறுமுகம்] [2015 செப்டம்பர் 21

மானியக் குழு மற்றும் மத்திய மனித வள மேம்பாட்டுக் குழு நெறிமுறைகளுக்கு முரண்பாடாக வேந்தர் நியமனம் உள்ளது என 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நிருவாகத்திற்குச் சுட்டிக்காட்டியும், நிருவாகம் அதை சரி செய்யவில்லை. மேலும், பல நினைவூட்டுக் கடிதங்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியும், 2015 ஆம் ஆண்டு, ஜூன் 30 ஆம் தேதி, மானியக் குழு எச்சரித்தும், நிருவாக அறக்கட்டளை கண்டுகொள்ளாமல் உள்ளது. அதன் வேந்தர் தொடர்ந்து செயல்படுவதால், பல்கலைக்கழக மானியம் நிறுத்தப்படும் நிலை உள்ளது. இந்நிலை தொடர்ந்தால், அப்பல்கலைக்கழகம் சுயநிதிப் பல்கலைக்கழகமாக மாறக்கூடிய அபாயம் உள்ளது. அதனால் அப்பல்கலைக்கழகத்தில் பயிலும் இளங்கலை, முதுகலை மாணவர்களின் எதிர்காலம், பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் எதிர்காலம், நலன், பணிப் பாதுகாப்பு போன்றவை கேள்விக்குறியாக உள்ளன. இப்பல்கலைக்கழகத்தில், தற்போது துணைவேந்தர், பதிவாளர், உதவிப் பதிவாளர், நிதி அறிவுரையாளர் (Financial Advisor), தேர்வுக் கட்டுப்பாட்டாளர் (Controller of Examination) போன்ற முக்கிய பணியிடங்கள் காலியாக உள்ளன. ஆகவே, வேந்தர் திரு. டி.எஸ்.கே. மீனாட்சிசுந்தரம் அவர்கள், அறக்கட்டளையின் துணைகொண்டு, அப்பல்கலைக்கழக நிருவாகத்தை தான் விரும்பியவாறு நடத்தத் திட்டமிட்டுள்ளார். எனவே, மேற்காணும் நிலைகளை நன்கு ஆய்ந்து, இப்பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் மாணவர்கள், பணிபுரியும் ஆசிரியர்கள், ஆசிரியர் பணியிடம் அல்லாத பணியிடங்களில் பணிபுரிவோர் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் ஆகியோரின் நலன் கருதி, மனித வள மேம்பாட்டு நிதி மற்றும் மானியக் குழு நெறிமுறைகளின்படி, அப்பல்கலைக்கழகம் இயங்க மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் தற்போது 733 பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. பொதுவாக இந்தியாவில் 4 விதமான பல்கலைக்கழகங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்தவகையில், தமிழ்நாட்டில் 52 பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. இந்தியாவிலேயே அதிகமான பல்கலைக்கழகங்கள் கொண்ட மாநிலம் தமிழகம். (குறுக்கீடு) பேசுகிறாரா? (குறுக்கீடு)*

2015 செப்டம்பர் 21] [திரு. கே. தங்கவேல்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் அவினாசிலிங்கம் மகளிர் நிகர்நிலைப் பல்கலைக்கழகம், மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையிடமிருந்து இரண்டு தவணைகளாக 29 கோடியே 67 இலட்சம் ரூபாய் நிதியினைப் பெற்று நடத்தப்படுகிறது. இப்பல்கலைக்கழகத்தை மத்திய அரசு ஏற்று நடத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்கள் ஆகியோரின் பணிகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள விவர அறிக்கையிலேயே, இப்பல்கலைக்கழகத்தை, "கிட்டத்தட்ட நொடித்தில் இயங்கக்கூடிய, மானியம் குறைவாக பெறக்கூடிய பல்கலைக்கழகம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, இந்தப் பல்கலைக்கழகத்தை மத்திய அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும். மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து, கடிதம் எழுதி, இப்பல்கலைக்கழகத்தை மத்திய அரசு நடத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய்த் தங்களிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்தியாவில் 4 விதமான பல்கலைக்கழகங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் தற்போது 753 பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 52 பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே அதிகமான பல்கலைக்கழகங்கள் கொண்ட மாநிலம் தமிழகம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. பி. பழனியப்பன்] [2015 செப்டம்பர் 21

முற்பகல் 11-20

பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில், அவை நான்கு வகைப்படும். Central Universities, State Universities, Deemed Universities and Private Universities–மத்திய பல்கலைக்கழகங்கள், மாநிலப் பல்கலைக்கழகங்கள், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் என நான்கு வகைப்படும்.

மத்திய பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசால் பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் இயற்றப்பட்டு, மத்திய அரசுமூலமாக அதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டு, நடத்தப்பட்டு வருவது மத்திய பல்கலைக்கழகங்கள் ஆகும். அப்படிப் பார்க்கின்றபோது, இந்தியாவில் 46 மத்திய பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் 2 மத்திய பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன.

மாநிலப் பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில், மாநில அரசால் சட்டமன்றப் பேரவையில் சட்டம் இயற்றப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. அப்படிப் பார்த்தால், இந்திய அளவில் 336 மாநிலப் பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 22 மாநிலப் பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே அதிகமான மாநிலப் பல்கலைக்கழகங்களைக் கொண்ட மாநிலம், தமிழ்நாடுதான் என்பதை நான் இங்கே கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலப் பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில், சட்டமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட்டு, அதற்குத் தேவையான நிதி, மாநில அரசாலும் வழங்கப்படுகிறது; University Grants Commission–ம் அதற்கான நிதியினை வழங்கி வருகிறது.

நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில், அவற்றிற்கு, பல்கலைக்கழகத்திற்கு நிகரான ஒரு status கொடுக்கப்பட்டு வருகிறது. அதனை முழுமையான பல்கலைக்கழகம் என்று சொல்ல முடியாது. பல்கலைக்கழகத்திற்கு நிகரான ஒரு அந்தஸ்து deemed University status கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், இந்தியாவில் 127 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 28 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலும்கூட,

2015 செப்டம்பர் 21][திரு. பி. பழனியப்பன்]

அரசு உதவி பெறும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், அரசு உதவி பெறாத நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் என இரண்டு வகைகள் உண்டு. அந்த வகையில், தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களை (private universities) பொறுத்தவரையில், தனியார் அறக்கட்டளை நிதி உதவியுடன், அறக்கட்டளையின் மூலமாக பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றி, மத்திய அரசின் நிதி உதவியோடு நாம் அவற்றைக் கொண்டு வரலாம்.

தனியார் பல்கலைக்கழகங்களை மாநில அரசும் சட்டமன்றத்தில் சட்டம் இயற்றிக் கொண்டு வரலாம். அந்த வகையில், தனியார் பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் 224 இருக்கின்றன. நமது மாநிலத்தில் நாம் ஒரு பல்கலைக்கழகத்தைக்கூட கொண்டுவரவில்லை. அதனை நாம் ஊக்கப்படுத்தவில்லை. அந்த வகையில் பார்த்தீர்களானால், இந்தியாவில், 733 பல்கலைக்கழகங்களும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 52 பல்கலைக்கழகங்களும் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் ஓர் ஐயம் ஏற்பட்டு, அந்த கோயம்புத்தூர் அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும்; அங்கு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றெல்லாம் கருத்துகளை வெளியிட்டு வருகிறார்கள். கோவை, அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில், தற்போது, இது ஒரு நிகர்நிலைப் பல்கலைக்கழகமாகச் செயல்பட்டு வருகிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, அவைக் குறிப்பில் பதிவு செய்யப்பட்டது போல, 1957 ஆம் ஆண்டு மறைந்த திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களால், மனையியல் கல்லூரியாக அது தொடங்கப்பட்டது. நமது மாநிலத்தில் மட்டுமல்ல; இந்தியா முழுவதிலும் உள்ள அனைத்து மகளிரும் அக்கல்லூரியில் சேர்க்கை பெற்று, அந்தக் கல்வியைப் பெறலாம். அனைவரும் உயர் கல்வி வாய்ப்பினைப் பெறும் நோக்கத்தில் இப்பல்கலைக்கழகம் துவங்கப்பட்டது. கல்வி ஆராய்ச்சியில், பெண்கள் சிறப்புடன் பங்களிப்பினைச் செய்யும் பொருட்டு இந்த வாய்ப்பு உருவாக்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு—U.G.C., பல்கலைக்கழகச் சட்டம், 1956—ன்படி அதனை நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக மாற்றியமைத்தது.

[திரு. பி. பழனியப்பன்][2015 செப்டம்பர் 21

நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில், தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு உதவிபெறும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் என இரண்டு வகைகள் இருக்கின்றன. அப்படிப் பார்த்தீர்களானால், இந்தியாவில் மொத்தம் 8 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் அரசு உதவிபெறும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களாகத் தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலே இருக்கக்கூடிய 127 Deemed Universities-ல், 8 Deemed Universities-க்கு அரசே முழு நிதியையும் வழங்குகிறது. அந்தவகையில், தமிழ்நாட்டில், இதுபோன்று அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம் மற்றும் காந்தி கிராம் பல்கலைக்கழகம் இவை இரண்டும் 100 சதவீதம் மானியம் பெற்று வருகின்றன. அந்த வகையில் U.G.C.-University Grants Commission 2014-2015 ஆம் ஆண்டில் அதன் நெறிமுறைகளில் சில திருத்தங்களைக் கொண்டு வந்தது. புதிது, புதிதாக மென்மேலும் கல்வி ஆராய்ச்சியை வளர்க்க வேண்டும், புதுப் புது பாடத் திட்டங்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் அவர்கள் அவ்வப்போது தேவைக்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப ஒவ்வோராண்டும், சட்டதிட்டங்களை மாற்றி அமைத்து வருகிறார்கள். அந்த வகையில், U.G.C., 2014-2015 ஆம் ஆண்டில், அதன் நெறிமுறைகளில், regulations-ல் சில திருத்தங்களைக் கொண்டு வந்தது. அதன்படி society விதிமுறைகளில், MoA-Memorandum of Association-ல் சில திருத்தங்களைச் செய்யச் சொன்னது. அதன்படி திருத்தங்கள் செய்து அனுப்பியுள்ளனர். அதனடிப்படையில் நிதி நல்கைக் குழு, அவினாசி நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தைப் பொது நிதி பல்கலைக்கழகம் அதாவது, Public Funded University ஆக அறிவித்து, திருத்தம் செய்யச் சொன்னது. அதன்படி மாற்றங்கள் செய்து, மனித வள மேம்பாட்டு அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில், இப்பல்கலைக்கழகத்தினை சுயநிதிப் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு வாய்ப்பே இல்லை. அந்தப் பல்கலைக்கழகத்திற்கு எவ்வளவு நிதி தேவைப்படுமோ, நான் ஏற்கெனவே கூறியதைப்போல் பற்றாக்குறை நிதி, அதாவது, பல்கலைக்கழகம் தானாகவே சில நிதிகளை ஏற்படுத்திக்கொள்ளும், அதேநேரத்தில், பற்றாக்குறை ஏற்பட்டால் அரசு உதவி செய்யும். ஆகவே, அந்தப் பல்கலைக்கழகத்திற்கு எவ்வளவு பற்றாக்குறை ஏற்படுகிறதோ, 100 சதவீத மானியத்தை மத்திய அரசாங்கம் U.G.C. மூலமாக இன்று வரை தொடர்ந்து வழங்கி வருகிறது. ஆகவே, அதுபோன்ற நிதி நெருக்கடி பிரச்சினை அங்கு இல்லை.

2015 செப்டம்பர் 21][திரு. பி. பழனியப்பன்]

அந்த வகையில், இன்றளவும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில், U.G.C.-யின் மேற்பார்வையின்கீழ் அந்தப் பல்கலைக்கழகம் இயங்கி வருகிறது. பொதுவாக, மாநில அரசு ஆரம்பிக்கிற பல்கலைக்கழகங்கள்தான் நம்முடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும். நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்காது. மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில்கூட இருக்காது; அது University Grants Commission-னுடைய கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. அதுதான் அதற்கு அனுமதி வழங்கி வருகிறது. அந்த வகையிலே, மாநில அரசு நேரடியாகத் தலையிட்டு அதை எடுத்து நடத்த வேண்டிய அவசியமில்லை.

முற்பகல் 11—25

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் என்பது, மாநில அரசினுடைய உதவியைப் பெற்று நடத்தப்படுகிற ஒரு பல்கலைக்கழகம். ஆனால், இந்தப் பல்கலைக்கழகம், மத்திய அரசினுடைய உதவியைப் பெறுகிற பல்கலைக்கழகம். ஆகவே, இதுபோன்ற சம்பளப் பிரச்சினையோ, மாணவர் சேர்க்கையில் பிரச்சினையோ அல்லது இடப் பிரச்சினையோ எதுவும் அந்தப் பல்கலைக்கழகத்தில் ஏற்படவில்லை. ஆகவே, அதை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டிய அவசியமில்லை. தற்பொழுது அந்தச் சட்டதிட்டம் வரும்வரையில், அந்தப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு மூத்த பேராசிரியர் துணைவேந்தராக நியமிக்கப்பட்டு, அவருக்கான பொறுப்புகள் வழங்கப்பட்டு, சிறந்த முறையில், நல்ல முறையில் அப்பல்கலைக்கழகம் நடைபெற்று வருகிறது. அந்த மகளிர் பல்கலைக்கழகம் திறக்கப்பட்டு, அங்கு நல்ல முறையிலே மாணவியர் பயின்று வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விப்பட்ட எந்தவிதமான அச்சத்திற்கும் இடமில்லாமல், அந்த நிகர்நிலைப் பல்கலைக்கழகம், அரசு உதவிபெறும் நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக தற்போது செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (குறுக்கீடு)

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தேன். (குறுக்கீடு) முன்பே நான் உங்களை

அழைத்தேன். ஆனால், அவையில் நீங்கள் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அவர் பதில் சொன்னதற்குப் பிறகு கேள்வி எல்லாம் கேட்க முடியாது. (குறுக்கீடு) பதில் சொன்னதற்குப் பிறகு நீங்கள் கேள்வி கேட்க முடியாது, உட்காருங்கள். முன்பே, நீங்கள் அவையில் இருந்திருந்தால், நீங்கள் பேசுவதற்கு நான் அனுமதி வழங்கியிருப்பேன். (குறுக்கீடுகள்)

3. தகவல் கோரல்–தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்–தொடர்ச்சி

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. சவுந்தரராசன், என்ன? சொல்லுங்கள்.

* **திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாக்கள்–விடைகள் நேரத்தை நாங்கள் அனுமதித்தோம். கவன ஈர்ப்பிலும் நாங்கள் கலந்து கொண்டு பேசியிருக்கிறோம். இப்போது அரசினர் தீர்மானங்களை எடுப்பதற்கு முன்பு **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சவுந்தரராசன், (குறுக்கீடு) நேரமில்லை, நீங்கள் வேண்டுமென்றே கேட்கிறீர்களேயொழிய, சரியான முறையிலே நீங்கள் கேட்கவில்லை. (குறுக்கீடு) நேரமில்லை, இன்றைக்குக் காலையிலே நீங்கள் வந்தது முதல், வினாக்கள்–விடைகள் நேரத்தைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டீர்கள். பின்னர் Zero hour–லும் கேள்வியை raise செய்தீர்கள். (குறுக்கீடு) இப்போது கவன ஈர்ப்பு முடிந்து, நான் வேறு அலுவலுக்குப் போகப் போகிறேன். இப்போதும் நீங்கள் எழுந்து கேள்வி கேட்கிறீர்கள். (குறுக்கீடு) இது முறையில்லை; (குறுக்கீடு) இது முறையில்லை. அவை நடவடிக்கைகளுக்கு நீங்கள் குந்தகம் விளைவிக்கிறமாதிரி இருக்கிறது. ஆகவே, இது முறையில்லை, உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.